செ.வெ.எண்:17 நாள்:12.11.2018

நாகப்பட்டினம் மாவட்டம்

2011 முதல் 2016-ம் ஆண்டு வரை வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்கள் வரும் 24.01.2019-க்குள் புதுப்பித்துக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். சீ. சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் தகவல்

நாகப்பட்டினம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் தங்களது பதிவினை கடந்த 01.01.2011-ம் ஆண்டு முதல் 31.12.2016-ம் ஆண்டு வரை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை வழங்கி அரசாணை பெறப்பட்டுள்ளது. இச்சலுகையின்படி மேற்கண்ட காலங்களில் பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்கள் தங்களது வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை நகலுடன் வரும் 24.01.2019-க்குள் நேரிலோ அல்லது அஞ்சல் வாயிலாகவோ புதுப்பித்துக்கொள்ளலாம். வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை நகலுடன் பதிவு அஞ்சலில் விண்ணப்பித்தும் அல்லது இப்புதுப்பித்தல் சலுகையினை www.tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும் புதுப்பித்து பயன்பெறலாம். மேற்கண்ட ஆண்டுகளில் ( 2011 முதல் 2016 வரை ) பதிவை புதுப்பிக்கத்தவறிய பின்னர் புதிதாக மறு பதிவு செய்த மனுதாரர்களும் இச்சிறப்பு புதுப்பித்தல் சலுகையின் கீழ் பயன்பெறலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். சீ. சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்**